### ★ ரூ.380 கோடியில் கண்ணன்கோட்டை- தேர்வாய்கண்டிகை புதிய நீர்த்தேக்கம்

### ★ ரூ.61,843 கோடியில் சென்னை 2-வது மெட்ரோ ரயில் திட்டம்

### ★ கோவை அவினாசி சாலையில் ரூ.1620 கோடியில் உயர்மட்ட சாலை

### ★ கரூர் நஞ்சை புகளூரில் ரூ.406 கோடியில் காவேரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை

# ரூ.67,378 கோடி மதிப்பீட்டில் தமிழகத்தில் புதிய திட்டங்கள்

## முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் மத்திய அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டினார்

**ரூ.380 கோடியில் கண்ணன்கோட்டை- தேர்வாய்கண்டிகை புதிய நீர்த்தேக்கம், ரூ.61,843 கோடியில் சென்னை 2-வது மெட்ரோ ரயில் திட்டம், கோவை அவினாசி சாலையில் ரூ.1620 கோடியில் உயர்மட்ட சாலை, கரூர் நஞ்சை புகளூரில் ரூ.406 கோடியில் காவேரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை உள்பட ரூ.67,378 கோடி மதிப்பீட்டில் தமிழகத்தில் பல்வேறு புதிய திட்டங்களுக்கு சென்னையில் நேற்று முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டினார்.**

**சென்னை, நவ. 22-**

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்கவும், கட்சி சார்பிலான நிகழ்ச்சியில் பங்கேற்கவும் சென்னை வந்துள்ளார். அதைத்தொடர்ந்து நேற்று மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரசு விழாவில் கலந்து கொண்டார்.

விழாவிற்கு வருகை தந்த அமித்ஷாவை முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர் டி.ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்று விழா மேடைக்கு அழைத்து சென்றனர்.

விழா மேடையில் வைக்கப்பட்டிருந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு உள்துறை அமைச்சர் அமித் ஷா, முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் தலைமை செயலாளர் க.சண்முகம் வரவேற்றார்.

முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ரூ.67,378 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டினார். அதில், ரூ.380 கோடி மதிப்பீட்டிலான புதிய நீர்த்தேக்கத் திட்டம், ரூ. 61,843 கோடி மதிப்பீட்டிலான இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டம், கோயம்புத்தூர் - அவிநாசி சாலையில் ரூ.1,620 கோடி மதிப்பீட்டிலான உயர்மட்ட சாலைத் திட்டம், கரூர் மாவட்டம், நஞ்சை புகளூரில் ரூ.406 கோடி மதிப்பீட்டிலான காவேரி கதவணை திட்டம், ரூ.900 கோடி மதிப்பீட்டிலான வல்லூர் பெட்ரோலியம் முனைய திட்டம், ரூ.1,400 கோடி மதிப்பீட்டிலான அமுல்லைவாயல் லூப் பிளான்ட் மற்றும் காமராஜர் துறைமுகத்தில் ரூ.900 கோடி மதிப்பீட்டில் புதிய இறங்கு தளம் திட்டம் உள்ளிட்டவை அடங்கும். விழாவில் தொடர்ந்து துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் பேசினர் தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் விழாவிற்கு முன்னிலை வகித்தார்.

விழா மேடையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி விநாயகர் சிலையையும், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நடராஜர் சிலையையும் நினைவு பரிசாக வழங்கினர்.

விழா அரங்கம் முழுவதும் சமூக இடைவெளியுடன் கூடிய இருக்கை அமைக்கப்பட்டிருந்தது.